# பெப்ரவரி - 26 - பொதுக்கால 8ம் வார ஞாயிறு

"கடவுளே நமக்கு அடைக்கலம்." (தி.பா.62:8)

---------------------------------------------------------------

## முதல் வாசகம்: ஏசாயா 49:14 – 15

சீயோன் மகளோ, "ஆண்டவர் என்னைக் கைவிட்டுவிட்டார், ஆண்டவர் என்னை மறந்து போய்விட்டார்" என்றாள். பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும், நான் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டேம்!

**பதில்பாடல்:** என் நெஞ்சே கடவுளுக்காகப் பொறுமையாய்க் காத்திரு

## இரண்டாம் வாசகம்: 1கொரிந்தியர் 4:1 - 5

சகோதரர்களே, எங்களைக் கிறிஸ்துவின் பணியாளர், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர் என்றே எவரும் கருதவேண்டும். இனி, கண்காணிப்பாளர் நம்பிக்கைக்கு உரியவராய் இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம் அன்றோ? என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு நீங்களோ, மனிதரின் நீதிமன்றமோ தீர்ப்புக் கூறுவதுபற்றி நான் கவலைப்படவில்லை. நானும் எனக்குத் தீர்ப்பிட்டுக் கொள்ளமாட்டேன். என் மனச்சாட்சி என்னை எதிலும் குற்றம் சாட்டவில்லை. ஆயினும் இதனால் நான் குற்றமற்றவன் என்று சொல்ல முடியாது. எனக்குத் தீர்ப்புக் கூறுகிறவர் ஆண்டவர் தாம். ஆகையால் குறித்த காலம் வருமுன் தீர்ப்பிடாதீர்கள். ஆண்டவர் வரும்வரை காத்திருங்கள். இருளில் மறைந்திருப்பதை அவர் வெட்ட வெளிச்சமாக்குவார். உள்ளங்களின் உட்கருத்துகளை வெளியாக்குவார். அப்பொழுதான் ஒவ்வொருவனும் கடவுளிட மிருந்து புகழ்பெறுவான்.

## நற்செய்தி: மத்தேயு 6: 24 - 34

அக்காலத்தில் இயேசு கூறியதாவது, "எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்யமுடியாது. "ஆதலால் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உயிர்வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப்பட வேண்டாம். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவையல்லவா? வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். நீங்கள் அவற்றிலும் மிக மேலானவர்களன்றோ? கவலைப்படுவதனால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்டமுடியும்? உங்கள் உடையைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? வயல்வெளி மலர்கள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. ஆயினும் சாலொமோன்கூடத் தன் மாட்சியி லெல்லாம் இவற்றில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். குறைவான விசுவாசம் உள்ளவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வயல்வெளிப் புல்லைக் கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்வளவுதான் செய்யமாட்டார்! ஆதலால், எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்படவேண்டாம். ஏனெனில், புறவினத்தார்தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே, கடவுளின் அரசையும் அவருடைய ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள் இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப்பற்றிக் கவலைகொள்ளும். அன்றன்றைய தொல்லை அன்றன்றைக்குப் போதும்.

**தியானம்:** பொதுக்காலத்தின் எட்டாவது வார இறைவார்த்தைகள் இறை பராமரிப்பில் நம்பிக்கை வைத்து இறையாட்சி விழுமியங்களுடன் வாழ எமக்கு அழைப்பு விடுக்கின்றது. எமது மனித பெலவீனத்தால் அவ்வுலக தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சொந்த, சுகம், நமது குடும்பம், நமது உறவுகள் என்பனவற்றிற்கு கட்டுப்பட்டவையாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். குறிப்பாக செல்வம் சேர்ப்பது நல்லது என்று நமக்கு நவீன உலகம் கற்றுத்தருகின்றது. எப்பொழுதுமே நம்முடையது என்ற எந்தப் பொருளுமே இல்லை. ஏனெனில் எல்லாப் பொருட்களும் அழியும் அல்லது பயனற்றுப்போகும். இதுதான் வாழ்வின் அடிப்படைப் பாடம், இதைத்தான் இன்றைய நற்செய்தி நமக்கு உணர்த்துகின்றது. "நாமோ கடவுளின் கைவேலைப்பாடு நமக்கேன் தனிப்பட்ட நிரந்தரமற்ற பொருட்செல்வம். இதுவே இன்றைய முக்கிய கேள்வியாக எழுந்துள்ளது.? காட்டுப்புல்லுக்கு கருணை காட்டும் கடவுள் தம் சாயலாக படைக்கப்பட்ட மனிதர்களுக்கு அதிகமாக செய்யமாட்டாரா? என்ற வார்த்தைகள் மேலும் எம்மை சிந்திக்க வைக்கின்றன. கடவுளின் பாதுகாப்பில் நம்மை ஒப்படைக்கத் தவறுவோமேயானால் நாம் நம்பிக்கை குன்றிய மக்களாவோம். நம்பிக்கையே வாழ்க்கை. நமக்கு உயிரையும் அதைத்தாங்க ஓர் உடலையும் தந்துள்ள இறைவன் அவற்றைப் பாதுகாக்க தேவையான அனைத்தையும் நிற்சயம் தருவார். என்ற நம்பிக்கையில் வாழ்வோம். இறையாட்சி மதிப்பீடுகளையும் நிலைவாழ்வுச் சிந்தனைகளையும் முதன்மைப்படுத்தி வாழ்வோம்.